புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
UGC Approved Journals
ISSN: 2456-821X
Vol:07, Issue: 02 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது மே 2023 – வெளியிடப்பட்டது ஜூன் 2023
SACRED HEART RESEARCH PUBLICATIONS
June-2023

# கவிமணியின் மருமக்கள் வழி மான்மியத்தில் பெண்கள் நிலை

பேரா. முனைவர் ஜா. ஜெயக்குமார்,
உதவிப்பேராசிரியர் & தலைவர்,
தமிழ்த்துறை, கே.எம்.ஜி. கலை மற்றும் அறிவியல் கல்லூரி, குடியாத்தம்.

*முன்னுரை*

*இருபதாம் நூற்றாண்டில் பல கவிஞர்கள் கவிதைகள் மூலம் மக்களிடையே சமுதாய விழிப்புணர்வை ஏற்படுத்தினர். அத்தகைய கவிஞர்கள் 'கவிமணி' என்ற சிறப்புப் பட்டத்தைப் பெற்ற சி. தேசிக விநாயகம் பிள்ளை குறிப்பிடத்தக்கவர் ஆவார். அவர்தம் படைப்புகளின் வழியே மக்களிடையே சமுதாய விழிப்புணர்வை உண்டாக்கியவர், அவரது பல்வேறு படைப்புகளில் சிறந்து விளங்குவது நாஞ்சில் நாட்டு மருமக்கள் வழி மான்மியம் ஆகும். நாஞ்சில் நாட்டில் வழக்கத்திலிருந்து வந்த மருமக்கள் வாரிசு முறையையும் அதனால் விளைந்த சமூகக் கேடுகளையும் அங்கதப் பாடல்கள் முறையில் ஒரு தலைவியின் கூற்றாக அமைந்தது இந்நூல் ஆகும். அவ்வகையில் மருமக்கள் வழி மான்மியத்தில் காணலாகும் பெண்ணியச் சிந்தனைகளை எடுத்துரைப்பதாக இவ்வாய்வுக் கட்டுரை அமைகிறது.*

*கவிமணியின் இலக்கியப் பங்களிப்பு*

*கன்னியாகுமரி மாவட்டம் தேரூர் என்னும் கிராமத்தில் சிவதாணுப்பிள்ளை - ஆதிலட்சுமி இணையரின் மகனாகப் பிறந்தவர் கவிமணி. ஆசிரியர் பணிபுரிந்த கவிமணி மிகச் சிறந்த கவிஞராகவும் பல்துறை வித்தகராகவும் விளங்கினார். குழந்தைப் பாடல்களை தமிழ் இலக்கியத்திற்கு அறிமுகம் செய்தவர் கவிமணி ஆவார். மேலும், அழகம்மை ஆசிரிய விருத்தம், மலரும் மாலையும், மருமக்கள் வழி மான்மியம், ஆசியஜோதி, உமர்கய்யாம் பாடல்கள், ஸ்ரீதேவியின் கீர்த்தனங்கள், கவிமணியின் உரைமணிகள், காந்தளூர்ச்சாலை முதலான இலக்கியப் படைப்புகளை எளிய இனிய தமிழில் தந்தவர் கவிமண் ஆவார்.*

*'கற்றவர் பலபே ருண்டு*
*கவிகளும் புனைய வல்லார்*
*மற்றவர் வியக்கப் பேசி*
*மகிழ்தரும் எழுத்தும் செய்வார்*
*கற்றதை உணர்ந் தடங்கி*
*கசடற வாழ்ந்து காட்டி*
*நிற்றலை யன்றோ எங்கள்*
*கவிமணி நினைவு கூட்டும்'* [1]

*என்ற நாமக்கல் கவிஞரின் பாராட்டு கவிமணியின் இயல்பினைச் சுட்டிக் காட்டும்.*

*'தேனொழுகக் கவிபாடும்*
*தேசிக விநாயகமே!*
*நானுனடி கவிபாடி*
*நாடோறு மகிழு வனே!'* [2]

*என்ற அழ. வள்ளியப்பாவின் கவிதை பிற கவிஞர்கள் கவிமணி மீது கொண்டிருந்த மதிப்பை எடுத்துக்காட்டுகிறது.*

தேனைப் பாலை முக்கனியைத்
தெவிட்டா அமுதைச் சிந்திக்கும்
ஊனம் இல்லா உன் கவியை
உன்னும் போதென் உள்ளந்தான்
வானோர் நாஞ்சில் நாட்டில் வாழ
வண்மைப் புலவா வையத்துத்
தானேர் இல்லாத் தமிழேபோல்
தழைத்து நீடு வாழுதியே!' [3]

என்ற பரசி சு. நெல்லையப்பரின் வாழ்த்து கவிமணியின் இயல்பையும் சிறப்பையும் விளக்குவதாக அமைந்துள்ளது.

மருமக்கள் வழி மான்மியம் - ஓர் உண்மை விளக்கம்

'கவிமணி நாஞ்சில் நாட்டு வேளாளர் சமூகத்தில் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்த இக்காப்பியத்தை உருவாக்கினார். சமுதாயத்தின் பரிதாபகரமான நிலையைச் சித்தரித்துக் காட்டினால் நம்மவர்கள் உண்மையுணர்ந்து, சீர்திருத்த முறையில் ஒரு முகமாய் உழைப்பார்கள் என்று பிள்ளையவர்கள் கருதினார். இதுதான் நாஞ்சில் நாட்டு மருமக்கள் வழி மான்மியத்தின் உற்பத்தியாகும்' [1] என்ற கூற்றின் மூலம் இக்காப்பியம் உண்மை நிகழ்ச்சியின் விளைவு என்பதை அறியமுடிகிறது.

மருமக்கள் வழி மான்மியம் என்ற நூலின் பாடல்கள் அனைத்தும், 1917-ஆம் ஆண்டு மார்ச்சு திங்கள் தொடங்கி 1918-ஆம் ஆண்டு பிப்ரவரி முடிய, பகுதி, பகுதியாக திருவனந்தபுரத்தில், தமிழன் என்ற பத்திரிகையில் வெளியிடப்பட்டது. ஆசிரியர் பெயர் இல்லாமல் மான்மியம் என வெளியிட்டனர் இதற்குக் காரணம், கவிமணி, மக்கள் செய்தியை அறிந்துகொள்ள வேண்டும் என்பதை மட்டும் நோக்கமாகக் கொண்டிருந்தமையே. இந்நூலைப் பற்றிக் 'கவிமணி தன்னடக்கத்திலும், பண்பிலும் சிறந்து விளங்கியவர். பழைய ஏட்டுச் சுவடிகளில் இருந்த பாடல்கள் போல் மருமக்கள் வழி மான்மியம் பாடல்கள் அனைத்தும் வெளியிடப்பட்டன என்றும், நூலின் சிற்சில வரிகளும், சொற்களும் பொடிந்து போயின' எனவும் எஸ்.வையாபுரிப்பிள்ளை குறிப்பிடுகின்றார்.' [2]

மான்மியம் என்பதற்கு விளக்கம்

'மருமக்கள் வழி மான்மியம்' என்னும் நூலின் பெயரே வஞ்சப் புகழ்ச்சியாக அமைந்துள்ளது. 'மகாத்மியம்' என்னும் வடசொல் 'மான்மியம்' என நிற்கின்றது. மருமக்கள் தாயமுறையில் எழுந்த சமுதாயச் சிக்கல்களை எடுத்துக்கூறும் விதமாக இந்நூல் அமைந்துள்ளது.

'கி.பி. பதினேழாம் பதினெட்டாம் நூற்றாண்டும், அதற்குச் சற்றுப் பிந்திய காலமும் சிற்றிலக்கியக் காலமாகும். அக்காலங்களில் மூர்த்திதலம் தீர்த்த மகிமைகளைக் கூறும், புராணங்களும், மான்மியங்களும் தமிழில் மிகுதியாகத் தோன்றின. அவற்றிற்கிருந்த செல்வாக்கினைக் கண்ட தேவி தம் படைப்புக்கு மான்மியம் என வஞ்சகப் புகழ்ச்சியில் பெயர் சூட்டிக்கொண்டார்' [6] என்று செ.சதாசிவம் என்பார் 'கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை' எனும் நூலுள் குறிப்பிடுகின்றார்.

மான்மியத்தின் கதை அமைப்பு

இந்நூலுள் விநாயகர் வணக்கம், அவையடக்கம் தவிர்த்துப் பதினோரு படலங்கள் அமைந்துள்ளன.

1. குலமுறை கிளத்துப் படலம்
2. மாமி அரசியற் படலம்
3. கேலிப் படலம்
4. கடலாடு படலம்
5. பரிகலப் படலம்
6. நாகஸ்திரப் படலம்
7. கருடாஸ்திரப் படலம்
8. வாழ்த்துப் படலம்

9. கோடேறிக்குடி முடித்தப் படலம்
10. யாத்திரைப் படலம்
11. கும்பியெரிச்சல் படலம்

பழைய காப்பியங்களில் இடம்பெறுவது போல் கவிமணி படலங்களை அமைத்துள்ளார். இதில் ஒவ்வொரு படலத்திலும் சோகம் கலந்த நகைச்சுவை இடம் பெறுமாறு அமைக்கப் பெற்றுள்ளது.

மருமக்கள் வழி மான்மியத்தின் தொடக்கம்

பஞ்சகல்யாணிப் பிள்ளை என்பவருக்குச் கடைசியாக வாழ்க்கைப்பட்டவள் கூறுகையில்,

'மருமக்கள் வழியென்னும் வனத்தில்
புலிகள் சூழுமோர் புல்வாய் போல்
வலையிற் படுமோர் மணிப்புறாப் போல
கொள்கொம் பற்றுத் துவள்கொடி போல
ஒருத்தி ஏழை ஒருதுணை யில்லாள்
தானும் மக்களும் தமியராகிப்
பொறியும் கலங்கிப் போதமும் கெட்டுப்
புலம்பும் பொழுது புண்ணிய சீலரே!' [7]

இந்த அடிகளில், பெண் எந்த ஓர் ஆதரவும் இல்லாமல் கூட்டுக் குடும்பத்தில் வாழ்க்கைப்பட்டுக் கலங்கி நிற்கும் நிலையைக் கவிமணி மிக விளக்கமாக எடுத்துக்கூறுகிறார்.

மேலும்,

'என்கதை கேளும் என்கதை கேளும்!
இரக்கமுள் ளோரே என்கதை கேளும்!
நூல்களைக் கற்ற நுண்ணறி வோரே!
நடுநிலை நீதி நடத்தும் நல் லோரே!
மக்களைப் பெற்று வளர்க்கும் சீலரே!
ஏழையென் துயரம் எல்லாம் கேளும்!
காசினி மீதென் கதைபோல் இல்லை!
சீதையின் கதையும் சிறுகதையாகும்!' [8]

எனும் கவிதையில் இரக்கமுள்ளோரே, அறிவிற் சிறந்து விளங்கும் அறிஞர்களே கேளும், எனப் பலவாறு கூறி கடைசியில் புராணங்களில் வரும் சீதைக்கும், பாஞ்சாலிக்கும் நேர்ந்த கொடுமைகளைக் காட்டிலும் மான்மியத் தலைவிக்கு இழைக்கப்பட்ட கொடுமைகள் மிகுதியானவை எனக் கவிமணி கூறுகிறார்.

'பாவியாம் என்னைப் பதினா றாண்டில்
ஐந்தாம் மனைவியாக மணந்தனர்
… … … … … … … … … … …
… … … … … … … … … … …
அத்தனை பேருக்கும் அடிமை யாளாய்
ஏழை பாவி யானும் ஒருத்தி
எளியேன் சென்ற நாள் முதலாக
எல்லாம் வேலையும் என்தலை மேலாம்' [9]

என்பனவற்றில் பஞ்சகல்யாணிப் பிள்ளையின் ஐந்தாவது மனைவி. எனக்கு முன்னால் வாழ்க்கைப்பட்டுக் குடும்பம் நடத்தும் பெண்கள் அனைவருக்கும் நான் அடிமையாக வாழ்கின்றேன் என்று கூறுகின்றாள். பாரதியார் பெண் விடுதலை வேண்டும் என்று பல பாடலில் கூறியிருந்தாலும் இன்னும் நாட்டில் பெண்ணடிமை தீரவில்லை எனக் கவிமணி எடுத்தியம்புகிறார்.

மனைவியரின் நிலை

பஞ்ச கல்யாணிப் பிள்ளையின் ஐந்து மனைவிகளைப் பற்றி அறிமுகம் செய்கிறார் கவிமணி, அவர்களின் பண்பு நலன்களையும், குணங்களையும், வேலை செய்யாமல் இருப்பதற்குப் பல சூழ்ச்சிகள் செய்து முழுச்சோம்பேறிகளாக இருக்கின்ற நிலையையும்

எடுத்தியம்புகிறார். மூத்தவர் குழந்தை இல்லாதவள், தனக்குக் குழந்தையில்லை அதனால் நான் ஏன்? உழைக்க வேண்டும் என நினைத்து இருந்த இடத்தை விட்டு அகலவே மாட்டாள், அடுத்த அக்காள் அழுபிள்ளைக்காரி வேலை செய்யும் சூழ்நிலை நேர்ந்தால் குழந்தையை அழச்செய்வாள், மூன்றாம் அக்காள் முழுச்சோம்பேறி மூன்று மாதம் கருவுற்று இருந்தால், அதனால் அடிக்கடி வாந்தி எடுத்தபடி இருப்பதால் எந்த வேலையும் செய்யாமல் ஏறின கட்டிலை விட்டு இறங்கவே மாட்டாள், நான்காம் மனைவி கர்வமுடையவள் இவள் ஆண்களைத் தன் பேச்சாலும் அழகின் தன்மையாலும் எளிதில் மயக்குவள் என்பதை,

'இந்தி ராணியும் ஈடில்லை இவளது
மஞ்சள் பூச்சும் மயக்கிடு பேச்சும்
சாந்துப் பொட்டும் தாசிகள் மெட்டும்
கோல உடையும் குலுக்கு நடையும்
கொண்டை யழகும் கண்டு, கணவர்
அண்டையி லிருந்து அகலவே ஒட்டார்
தட்டான் கண்டால் பொன் என்பான்
தராசிலே வைத்துநிறு என்பான்
எங்கும் போகாமல் இங்கேயே யிரு' [10]

எனப் பஞ்சகல்யாணி பிள்ளையின் நான்காம் மனைவியின் அழகை வர்ணிக்கிறார். கணவரின் மனதில் எப்பொழுதும் நிலைத்திருந்ததால் வீட்டில் எந்தவொரு வேலையும் செய்யாமல் மற்றவர்களை அதிகாரம் செய்யும் தன்மை கொண்டிருந்தாள். பஞ்சகல்யாணியின் நான்காம் மனைவி வாயிலாக ஆண்களைப் பெண்கள் எளிதில் மயக்கும் நிலையை அறியமுடிகிறது.

ஒரு பெண்ணுக்கு மற்றொரு பெண் எதிரி என்பதற்கேற்ப இங்கு மாமியார் மருமகளைப் படுத்தும் பாடுகளை

'அரிசியை நிகமும் அளந்து வைப்பாள்;
நல்ல மிளகை நறுக்கி வைப்பாள்;
உப்பில் புளியை உருட்டி வைப்பாள்;
கறிக்குத் தேங்காய் கருக்கி வைப்பாள்;
கடுகையும் எண்ணிக் கணக்கிட்டு வைப்பாள்
தீபா வளிக்குத் தீபா வளியே
எண்ணெ யறியும் என்தலை அம்மா!
அரைக்க மஞ்சள் அளந்திடா மாமி
குளிக்க மஞ்சள் கொடுத்திடு வாளோ?' [11]

என எடுத்துரைத்துள்ளார். கவிமணி இக்கவிதையில் மாமியார் அதிகாரம் செய்யும் ஓர் இடம் மருமகளிடம் தான், அவள் வீட்டின் எல்லா அறைகளையும் பூட்டி வைப்பாள், மருமகள் சுதந்திரமாக எந்தப் பொருளையும் எடுத்தாளக் கூடாது என்பதற்காகப் பூட்டியே வைத்திருப்பாள். இதிலிருந்து மாமியாரின் கஞ்சத்தனம், அதிகாரத்தனம் வெளிப்படுகின்றது. தீபாவளிக்குத் தீபாவளியே எண்ணெய் அறியும் என் தலை அம்மா என்று கூறுவதிலிருந்து மாமியார் மருமகளைக் கொடுமைப்படுத்தும் நிலையைக் கவிமணி விளக்குவதை அறிய முடிகிறது.

'எறும்பும் காணா இடத்திவள் காண்போம்;
புகையும் நுழையா இடத்திவள் புத்திபோம்
… … … … … … … … … … …
… … … … … … … … … … …
நாட்டை முழுதும் நாழியால் அளப்பாள்.
நரியை முன்னம் பரியாய் ஆக்கின
நாதனும்கண்டு நாண, இவளும்
யானையைப் பூனையாக மாற்றுவாள்;
பூனையை யானை போலக் காட்டுவாள்.' [12]

எனும் பாடலில் மாமியாரின் திறமைகளை ஒவ்வொன்றாக விளக்குகிறார். மாமியாரின் கொடுமைகளுக்கு ஆளாவது மட்டுமல்லாமல் மதினியின் கொடுமையால் மிக அதிகமாகத் துன்பப்படுகின்ற நிலையும் ஏற்படுவதாய் பின்வரும் பாடலில் குறிப்பிடுகின்றார்.

'இரக்கம் சிறிதும், இன்றி எனக்கிவள்
இடுவாள் வேலைகள் இரவும் பகலும்,
குழந்தைக்குப் பால் கொடுக்க வொட்டாள்;
கும்பியாரக் குடிக்க வொட்டாள்;
உண்ண வொட்டாள், உறங்க வொட்டாள்;
உடலைக் கீழே சரிக்க வொட்டாள்;
அருமை மதினி அடிக்கடி அடிக்கடி
சடைவா றுதற்குத் தாய்வீட டைவாள்;' [13]

கவிமணி, மதினியின் கொடுமையைப் பலவாறு எடுத்துக் கூறுகின்றார். தாயைப் போல பிள்ளை என்ற பழமொழிக்கு ஏற்றவாறு பஞ்சகல்யாணி பிள்ளையின் ஐந்தாவது மனைவியைக் கொடுமைப்படுத்தும் நிலையை இங்குக் காண முடிகிறது. இவளுக்கு ஒரு நிமிடம் கூட ஓய்வு கொடுக்காமல் எந்நேரமும் வேலைகள் செய்ய சொல்கிறார் எனக் கவிமணி தெரிவிக்கின்றார். மான்மியத்தின் தலைவி, அவள்பட்ட துயரத்தால் மனவேதனையால் பெண் பிறவியை வெறுக்கிறாள். இதனை,

'ஐயோ!
துயரம் துயரம் பிறப்பே துயரம்!
பிறப்பினும் துயரம் பெண்மக ளாதல்
பெண்மக ளாதலிற் பெரிதும் துயரம்
மருமக்கள் வழி வலையிற்படுதல்;
வலையிற் பட்டு வருந்தலில் துயரம் ஓர்
காரணவருக்குக் கழுத்தைக் கொடுத்தல்
கழுத்தைக் கொடுத்தலில் துயரம் கருணை
இல்லா மாமிக் கிசைய நடத்தல்;
இசைய நடத்தலில் துயரம் என்போல்
பாரக மீதிப் பஞ்சபா விகளுள்
ஒருத்தியாக உயிர் பெற்றிருந்தலே! [14]

என்ற பாடல் மூலம் அறிய முடிகிறது கதைத் தலைவி கூறுவதாக அமைந்த,

'மாதர் கண்ணீர் மாறா நிலத்தில்
நீதியும் உளதோ! நீதியும் உளதோ!!
தெய்வமும் உளதோ தெய்வமும் உளதோ!
பொய்வழிப் பொருளைப் போக்கும் இந்நிலத்தில்
தெய்வமும் உளதோ! தெய்வமும் உளதோ!' [15]

என்னும் அடிகளில் மான்மியக் கதைத் தலைவி குடும்ப வாழ்க்கையில் ஆரம்ப முதல் முடிவு வரை பல இன்னல்களைத் துன்பங்களை அனுபவித்தாள் என்று ஆசிரியர் விளக்குகிறார்.

முடிவுரை

இருபதாம் நூற்றாண்டில் தோன்றிய கவிஞர்களுள் இணையற்றவராகத் திகழ்ந்தவர் கவிமணி ஆவார், கவிஞராக, ஆசிரியராக, கல்வெட்டு அறிஞராக, மொழிப்பெயர்ப்பாளராக, கட்டுரையாளர் எனப் பல்வேறு தளங்களில் பரிமணித்தவர் கவிமணி. பல்வேறு அறிஞர்களின் பாராட்டுரை கவிமணி மீது அவர்கள் கொண்டிருந்த மதிப்பைப் புலப்படுத்துகிறது. நாஞ்சில் நாட்டு வேளாளர் சமூகத்தில் நிலவும் இழிவுகள் நீங்க வேண்டும் என்ற கவிமணியின் உள்ளக் கிடக்கையே மருமக்கள் வழி மான்மியம் ஆகும். மருமக்கள் தாய முறையில் எழுந்த சமுதாயச் சிக்கல்களை எடுத்துக் கூறும் இந்நூலுள் காணலாகும் பெண்களின் பரிதாப நிலையை ஆசிரியர் எடுத்துக்காட்டியுள்ளார்.

சான்றெண் விளக்கம்

1. அ.கா. பெருமாள் & எஸ். ஸ்ரீகுமார் (ப.ஆ.), கவிமணியின் கவிதைகள், ப.567
2. மேலது., ப.568
3. மேலது., பக்.568-569
4. கவிமணி, மருமக்கள் வழி மான்மியம், பக்.15-16

5. மேலது., பக்.28-29
6. செ. சதாசிவம், கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை, ப.47
7. கவிமணி, மருமக்கள் வழி மான்மியம், ப.33
8. மேலது., ப.35
9. மேலது., ப.37
10. மேலது., பக்.38-39
11. மேலது., ப.40
12. மேலது., ப.41
13. மேலது., ப.42
14. மேலது., ப.51
15. மேலது., ப.121

துணை நூற்பட்டியல்

1. கவிமணி, மருமக்கள் வழி மான்மியம், சாரதா பதிப்பகம், ஐந்தாம் பதிப்பு, 2012.
2. அ.கா. பெருமாள் & எஸ். ஸ்ரீகுமார் (ப.ஆ.), கவிமணியின் கவிதைகள், செண்பகா பதிப்பகம், சென்னை. முதல் பதிப்பு,1999.
3. செ. சதாசிவம், கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்., சென்னை. முதல் பதிப்பு, 2011

********* ********* ********** ********* ********* ********** ********** **********